DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT, NAMAKKAL.

**CASE NO.CC.No. 29/2025**

**PW-7**

| | | |
|---|---|---|
| Name | : | சங்கர் (LW-14) |
| Father's Name | : | ராமலிங்கம் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the

Date: 04.02.2026

**விசாரணை தொடங்கும் நேரம்**: **காலை 11.30 மணி**

**(எதிரி ஆஜரில்லை, எதிரி தரப்பில் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை:**

**1.** நான் தற்போது நாமக்கல் மாவட்டம் நாமக்கல் நகர காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.11.2024ம் தேதி காலை 8.00 மணிக்கு நான் மோகனூர் காவல் நிலைய பொறுப்பு அலுவலில் இருந்த போது கலாராணி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று நிலைய குற்ற எண் 293/2024 சட்டபிரிவுகள் 281, 106 BNS கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுறது).** முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் வாதியின் புகார் மனுவினை கனம் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பி வைத்து ஒரு நகலை புலன் விசாரணைக்காக ஆய்வாளர் திரு. லட்சுமணதாஸ் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை: வாய்ப்பு அளித்தும் குறுக்கு விசாரணை செய்யபடவில்லை.**

**மறுவிசாரணை: இல்லை**

**விசாரணை முடியும் நேரம்**: **காலை 11.40 மணி**